# திருக்குறளில் சொல்வளம்

1

**முனைவர் அ ஜெஸிந்தாராணி**
**இணைப்பேராசிரியர்**
**தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**
**திருச்சிராப்பள்ளி 620002**
tamiljasintha@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

மொழியின் அடிப்படைக் கூறுகளில் சொல் ஒன்றாகும். சிறிய, தனித்து நிற்கின்ற பொருள் கொண்ட மொழிக்கூறு சொல் எனப்படும் என்கிறார். புளும் பீல்டு. தொல்காப்பியம் சொல்லைக் கிளவி, சொல், மொழி என்னும் மூன்று சொற்களால் குறிக்கின்றது. தொல்காப்பியத்தில் கிளவி என்னும்சொல் 368 இடங்களிலும் சொல் என்னும் சொல் 167 இடங்களிலும் மொழி என்னும் சொல் 136 இடங்களிலும் பயன்படுத்தப்படடுள்ளன. தமிழ் இலக்கண அறிஞர்கள் தமிழ்ச் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என நான்காகப் பகுத்துள்ளனர். அவற்றுள் பெயர் வினை ஆகியவை முதல் நிலையில் வைத்து எண்ணப்படுகின்றன.

**முன்னுரை**

சொற்கள் பொருளுடன் இயங்கும் தன்மை கொண்டவை. இவை செய்யுள் வழக்கிலும் உலக வழக்கிலும் சூழலுக்கேற்பப் பொருளைத் தந்து இலக்கியங்கள் உருவாகவும் இலக்கிய கருத்துக்களை வெளிப்படுத்தவும் உதவுகின்றன. 'இலக்கணம் என்பது யாது என்பது பற்றி ஒரு கணம் சிந்தியுங்கள். அதுதான் தருக்கத்தின் மிக முக்கியமான மூலக்கூறு ஆகும். சிந்தித்தலாகிய நடைமுறைப் பகுப்பாய்வு செய்வதற்கான ஆரம்பமாகும். இலக்கணத்தின் மூலங்கள், விதிகள் மூலம் தான் மொழியின் உருவ அமைதிகள் உலகப்பொதுவான சிந்தனையுடன் இணைக்கப் பெறுகின்றன"[1] என்று ஆட்டோ ஜெபர்சன் கூறுகின்றார்.

சொற்களுக்கு அடிப்படையானது பொருள் சொற்கள் அனைத்தும் பொருள்குறித்தே

அமையும். பொருளற்ற எழுத்துகளின் கூட்டத்தைச் சொல்லாகப் புலவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இதனை தொல்காப்பியர், எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே2 என்கிறார். சொற்கள் நான்கு வகைப்படும் எனத் தொல்காப்பியமும் அதனை மூல நூலாகக் கொண்டெழுந்த நன்னூலும் கூறுகின்றன. அந்த நால்வகைச்சொற்களைத் திருக்குறளில் பயன்படுத்தியுள்ள முறையை ஆராயும் பொருட்டு,

1. பெயர்ச் சொல்
2. வினைச்சொல்
3. இடைச்சொல்
4. உரிச்சொல் என்னும் நான்கு வகைகளாகப் பகுக்கப் பெற்று ஆராயப்படுகின்றன.

சொல்லெனப்படுப பெயரே வினை என்று ஆயிரண்டென்ப அறிந்தி சினோரே3 என்னும் நூற்பா எடுத்துரைக்கிறது. இடை, உரிச்சொற்கள் இரண்டாம் நிலையில் வைக்கப்பட்டமையை, இடைச்சொல் கிளவியும் உரிசசொல் கிளவியும் அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப4 என்கிறது தொல்காப்பியம். இதன் மூலம் பெயர்ச் சொல்லையும் வினைச சொல்லையும் சார்ந்து ஏனைய சொற்கள் அமைகின்றன என்பதை அறிய முடிகிறது. ஒன்றன் பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல். ஒரு பொருளின் பெயரையும் இடத்தின் பெயரையும் காலத்தின் பெயரையும் குறிக்கும் சொல். பொதுவாகப் பொருள்களைக் குறிக்கும் சொல்லைப் பெயர்ச் சொற்கள் என்று கூறுவர். இவை உயர்திணைக்கு உரியன, அஃறிணைக்கு உரியன, இரண்டு திணைக்கும் உரியன என மூன்று வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. உயர்திணை, அஃறிணைகளாகிய இரண்டும் ஐந்து பால்களாகப் பிரித்து அறியப்படுகின்றன. இவை பெரும்பாலும் பெயர் இடம், காலஞ், சினை, குணம் ஆறிடத்துஞ் சுட்டு6 என்பது சுவாமிநாதம் சுட்டும் பெயர்சசொல்லின் வகைகளாகும். பொருளின் பெயரைக் குறிப்பது பொருட்பெயர் எனப்படும். அது காரணப் பெயர் இடுகுறிபெயர் என இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. யாதேனும் ஒரு காரணம் கருதி வைக்கப்பட்டுத் தறபொழுது வழக்கில் பயன்பட்டுவரும் பெயர்கள் காரணப் பெயர்கள் என்றும் தொன்று தொட்டுக் காலம் காலமாக இட்டு வழங்கப்பட்டு வரும் பெயர்கள் இடுகுறிப் பெயர்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. தமிழில் பெரும்பான்மையான பெயர்கள் காரணப் பெயர்களாக

அமைந்துள்ளன. நெடுங்கடலும் தன் குன்றுல் தடிந்தஎழிலி தான்நல்கா தாகி விடின் (குறள்-17) நெடுங்கடலின் தண்ணீர் அளவும் குறைந்து போகும். எப்பொழுது எனில் “எழுச்சியுடைய மேகம் தன்னிடம் உள்ள நீரான மழையைத் தராவிடில்” என்று கூறப்பட்டுள்ளது. எழுச்சியையுடையதால் - எழிலி என்று அழைக்கப்படுகிறது. இங்கு எழிலி என்பது காரணப் பெயர் என்பதை அறியமுடிகிறது. இதுபோல இடுகுறிப் பெயர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் குறள்வழி அறியமுடிகிறது. நிலத்தையோ, ஊரையோ, நாட்டையோ குறிக்கும் பெயர் இடப் பெயர் எனப்படும். ஒரு பொருளின் புடைபெயர்ச்சியைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும். இந்த அறுவகைப் பெயர்களும் பெரும்பான்மையாகத் திருக்குறளில் ஆகுபெயர்களாகப் பயன்படுத்தப்படடுள்ளன.

ஆகுபெயர் விளக்கம்

ஆகுபெயர் என்னும் இலக்கணம் மரபு வழியிலானது. தொல்காப்பியர் இதற்கு வெளிப்படையான இலக்கணத்தை வகுத்துள்ளார். சமுதாயத்தில் நிகழும் சில நிகழ்ச்சிகள் உரிய விளக்கத்தைப் பெறாமல் பொருள் தொகுத்து நிற்கும் நிலைமையில் அதற்குரிய காரணத்தை விளக்க ஆகுபெயராகிய இலக்கணக் கூறு பயன்படுத்தப்படுகின்றது. பொருளுக்குப் பெயர் அமையும் முறை இலக்கணங்களில் உள்ளது. அப்பெயர் இடுகுறிப்பெயர் எனவும் காரணப் பெயர் எனவும் அழைக்கப்படுகிறது. ஒரு பொருளுக்கு இயற்கையாய் அமைந்த இடுகுறிப்பெயர் நடைமுறைத் தேவையால் பிறிதொரு பொருளுக்கு இடப்பட்டு அழைக்கப்பெறுவது ஆகுபெயர் என குறிக்கப்படுகிறது. பொருள் சிறப்புக்காகவும் இன்னொரு பொருளை உணர்த்துவதற்காகவும் இவ்வாகுபெயரை இலக்கியங்களில் பயன்படுத்தி வருகின்றனர். முதலிற் கூறும் சினையறி கிளவியும், சினையிற் கூறும் முதலறி கிளவியும் பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும் இயன்றது மொழிதலும் இருபெயரொட்டும் வினைமுதல் உரைக்கும் கிளவியொடு தொகை அனையமர பினவே ஆகுபெயர்க் கிளவி[7] என ஆகுபெயருக்குத் தொல்காப்பியம் இலக்கணத்தை வரையறுக்கின்றது. பொருள் முதலாறோ டளவைசொல் தானி கருவி காரியம் கருத்தன் ஆதியுள் ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத் தொன்முறை உரைப்பன ஆகு பெயரே[8] என்று நன்னூல் இலக்கணம் வகுத்துள்ளது. ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் தம்பொருள்

உணர்த்தாது பிறிதுபொருள் உணர்த்தும் பண்புடையன. இவை தம்முள் வேறுபட்டு நிற்பதை, ஆகுபெயர் ஒன்றன் பெயரான் அதனோடு இயைபு பற்றிய பிறிதொன்றனை உணர்த்தி ஒருமொழிக் கண்ணதாம். அன்மொழித்தொகை இயைபு வேண்டாது இருமொழியும் தொக்க தொகையாற்றலால் பிறிதுபொருள் உணர்த்தி இருமொழிக் கண்ணதாம். இவை தம்முள் வேற்றுமை என்க"9 எனச் சிவஞான முனிவர் விளக்கியுள்ளார்.

நன்னூல் குறிப்பிடும் ஆகுபெயர்கள பதினைந்து ஆகும். அவை

1.பொருளாகு பெயர்

2.இடவாகுபெயர்

3.காலவாகுபெயர்

4.சினையாகுபெயர்

5.பண்பாகுபெயர்

6.தொழிலாகுபெயர்

7.எண்ணல் அளவையாகுபெயர்

8.எடுத்தல் அளவையாகுபெயர்

9.முகத்தல் அளவையாகு பெயர்

10.நீட்டல் அளவையாகுபெயர்

11.சொல்லாகு பெயர்

12.தானியாகுபெயர்

13.கருவியாகுபெயர்

14.காரியவாகுபெயர்

15.கருத்தாவாகு பெயர் என்பன. திருக்குறளில் வரும் ஆகுபெயர்களும் அவை பொருள் உணர்த்தும்முறையும் இவ்வகைகளின் அடிப்படையில் ஆராயப்படுகின்றன. ஆகுபெயர் திருக்குறளில் ஆகுபெயர்கள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகின்றன. ஒப்பிட்டுக் கூறும் பான்மையில் பொருட்பாலில் ஆகுபெயர்கள் அதிகம் 100 பயன்படுத்தப்பட்டுள்ளன.

திருவள்ளுவர் தம் நூலில் பன்னிரண்டு வகையான ஆகுபெயர்களைப் பயன்படுத்தியுள்ளார். அவை, 1.பொருளாகுபெயர் 2.இடவாகுபெயர் 3.காலவாகுபெயர் 4.சினையாகு பெயர் 5.பண்பாகுபெயர் 6.தொழிலாகுபெயர் 7.எண்ணலளவை ஆகுபெயர் 8.தானியாகுபெயர் 9.கருவியாகுபெயர் 10.காரியாவாகுபெயர் 11.உவமையாகுபெயர் 12.பின்மொழியாகுபெயர் (அன்மொழியாகுபெயர்) என்பனவாகும். பொருளாகு பெயர் உயர்தினை, அஃறிணை சார்ந்த பொருட்களின் பெயர்கள ;அப்பொருட்களைச் சுட்டாது வேறொரு பொருளுக்கு ஆகிவந்து அப்பெயர்களைச் சுட்டுவது பொருளாகு பெயராகும். அதாவது ஒருபொருளின் பெயர் அதனுடன் தொடர்புடைய பிறிதொன்றற்கு ஆகிவருவதனைப் பொருளாகு பெயர் எனக் கொளளலாம். தமிழ் மரபிலக்கணமும் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. ஊயர் திணை - பொருளாகுபெயர் திருக்குறளில் வரும் 'நோற்பார்" (குறள்.48) என்ற வினையாலணையும் பெயரையும் ஆகுபெயர் என உரையாசிரியர் வை.மு.கோ தம் நூலில் குறிப்பிடுகிறார். தவஞ்செய்பவராகிய முனிவர்களை இச்சொல் குறிக்கிறது.

~நோற்பார்| என்பது தவஞ்செய்வாரை மட்டும் குறிக்காது தவஞ்செய்வார் நிலையையும் எடுத்துக்கூறுகிறது. இதனை அவர் நோற்பார் என்பது நோற்பாரின் நிலைமைக்கு ஆனது| என்கிறார். இரண்டு சொற்களும் உயர்திணைப் பொருளாகிய மக்களைச் சுட்டுவதால் இவை பொருளாகு பெயராயின10 ~தம் என்ற சொல் தெரிந்து செயல், வகை என்னும் அதிகாரத்தில் (குறள்.470) உயர்திணைப் பெயராக அமைந்துளளது. ~தம்| என்பது தமது நிலைமையைக் குறித்ததனால், பொருளாகு பெயர் என்கிறார். அரசர் வினைமுற்றுதல் பொருடடுத் தம் நிலைமையொடு பொருந்தாத உபாயங்களைச செய்வாராயின் உலகம் இகழா நிற்கும். தம் என்பது 101 ஆகுபெயர் என்கிறார் வை.மு.கோ.11

பரிமேலழகர் ~தம் மன்னர்களைக் குறிக்கிறது என்கிறார். கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல் - (குறள்.796) இக்குறளில் ~கிளைஞர்| என்னும் பொருட்பெயர் கிளைஞரின் பண்பைச் சுட்டுவதால் இது பொருளாகுபெயர் எனலாம். அஃறிணை - பொருளாகு பெயர் அஃறிணையில் குழல், யாழ், மலை, குன்றி ஆகிய

நான்கும் ஆகுபெயர்களாகக் கூறப்பட்டுள்ளன. குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள். மழலைச்சொல் கேளா தவர். - (குறள்.66) இதன்கண் குழல், யாழ் என்னும் இரண்டு சொற்களும் அஃறிணையாகும். இவை இசைக்கருவிப் பெயர்கள் இப்பெயர்கள் இசைக் கருவிகளைக் குறிக்காமல் அவற்றிலிருந்து எழும் இனிய இசையைக் குறிக்கின்றன. குழலினிது எனின் குழலிசை இனிது என்றும் யாழினிது எனின் யாழிசை இனிது என்றும் பொருள்கள் வெளிப்பட்டன.

குழல், யாழ் என்பன அவற்றின் ஒலிகளுக்குரிய பொருளாகு பெயர். பரிமேலழகர் குழல், யாழ் என்பன ஆகுபெயர் கேட்டவர் அவற்றிசையினும் மழலைக் சொல் இனிதென்று சொல்வரென்பது குறிப்பெச்சம் என்கிறார். நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது - (குறள்.124) என்பதில் வரும மலை என்னும் சொல் மலையைக் குறிக்காது மலையின் உயர்வைக் குறித்து வருதலின் இதுவும் பொருளாகு பெயராகும ;அதாவது மலை அதன் உயர்ச்சியைக் குறித்து வந்தது. இது போல், புறம் குன்றி | கண்டனைய ரேனும் அக்ங்குன்றி மூக்கிற் கரியார் உடைத்து - (குறள்.277) 102 என்னும் குறளில் வரும் ~குன்றி என்பது ஆகுபெயர். குன்றி என்னும் கொடியின் பெயர் அதன் மணியாகிய விதையைக் குறித்ததனால் பொருளாகு பெயர். இடவாகுபெயர் ~இடம்| என்பது நிலம். இடத்தின் பெயர் இடத்தின் கண்ணுள்ள பொருளுக்கு ஆகிவருவது இடவாகுபெயர். தமிழ் இலக்கணத்தில் கண் என்னும் ஏழாம் வேற்றுமை உருபும அதற்கு இணையாகக் கூறப்படும் உருபுகளாகிய கால், இடை, கடை, கீழ், மேல், உள், புறம் எனவரும் உருபுகளும் இடப்பொருளை உணர்த்துவன. இவை பெயர்ச்சொல்லுடன் சேர்ந்து இடப்பொருளை உணர்த்துவதால் இடவாகுபெயர் எனப்படுகின்றன. ஏழாம்வேற்றுமை ~கண்| என்னும் உருபு இடப்பொருளில் வருமேனும் அது தம்;முள் பல வகையில் பிரிந்து வருவதை இலக்கண நூல் ஆசிரியர்கள் நுண்ணிதின் உணர்ந்துள்ளனர். இடப்பொருளைச் சங்கர நமச்சிவாயர் பொருள் இடப்பெயர், இடம் குறிக்கும் இடப்பெயர், கால இடப்பெயர், சினை இடப்பெயர், குண இடப்பெயர், தொழில் இடப்பெயர் எனவரும் என்கிறார் அவர். இக்கருத்தை, மணியின் கண் ஒளி, மணியின்கண் இருந்தது ஒளி எனவும் பனையின் - கண் அன்றில், பனையின் - கண் இருந்தது அன்றில் எனவும் இரு கிழமைக்கும் பொருள் இடமாயிற்று. ஊரின்கண் இல்லம ; ஊரின் கண்

இருந்தது இல்லம் எனவும் ஆகாயத்தின் கண் பருந்து ஆகாயத்தின் கண் பறந்தது பருந்து எனவும் இடம் இடமாயிற்று. நாளின் கண் நாழிகை நாளின் கண் வந்தது நாழிகை எனவும் வேனிற் கண் பாதிரி, வேனிற்கண் பூத்தது பாதிரி எனவும் காலம் இடமாயிற்று. கையின்கண் விரல் கையின் கண் இருந்தது விரல் எனவும் கையின் கண் கடகம் கையின் கண் கிடந்தது கடகம் எனவும் சினை இடமாயிற்று கறுப்பின் கண் அழகு கருப்பின் கண் இருந்தது அழகு எனவும் இளமையின்கண் செல்வம் இளமையின்கண் இருந்தது செல்வம் எனவும் குண இடமாயிற்று, ஆடற்கண் சதி ஆடற்கண் நிகழ்ந்தது சதி 103 எனவும் ஆடற்கண் பாட்டு பாடப்பட்டது பாட்டு எனவும் தொழில் இடமாயிற்று12 என்று விவரிக்கின்றார்.

இதனால் இடவாகுபெயரை 1.இடம் பொருளாதல் 2.இடம் இடமாதல் 3.இடம் சினையாதல் 4.இடம் பண்பாதல் என பிரிக்க இயல்கிறது. இந்த ‘இடவாகுபெயர் திருக்குறளில் இருபத்தைந்து இடங்களில் வருகின்றது. பொருள இடமாதல் பொருள் ஒன்று இடமாகி அது பிறிதொன்றற்கு ஆகிவருவதனால் அது ~பொருள் இடவாகுபெயர் என அழைக்கப்படுகிறது. உலகு(குறள்.1) என்பது இடப்பொருளாகும். உலகம் பொருள் என்பது அறிஞர் தம் துணிபு. உலகின்கண் உள்ள உயிர்களைச் சுட்டுவது. இதனால் இஃது பொருள் இடவாகு பெயராயிற்று, உலகு என்பது இக்குறளில் பொருளாகிய இடத்தைச் சுட்டாது உலகின்கண் உள்ள உயிர்களைச் சுட்டியது. இதனால் இஃது பொருள் இடவாகுபெயர் எனப்பட்டது. கம்பராமாயணத்தில் வரும் ~உலகம் யாவையும் தாமுளபொருளின் பெயர் அதனுடன் தொடர்புடைய பிறிதொன்றற்கு ஆகிவருவதனைப் பொருளாகு பெயர் எனக் கொள்ளலாம். தமிழ் மரபிலக்கணமும் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. உயர்திணை - பொருளாகுபெயர் திருக்குறளில் வரும் 'நோற்பார்" (குறள்.48) என்ற வினையாலணையும் பெயரையும் ஆகுபெயர் என உரையாசிரியர் வை.மு.கோ தம் நூலில் குறிப்பிடுகிறார். தவஞ்செய்பவராகிய முனிவர்களை இச்சொல் குறிக்கிறது. ~நோற்பார் என்பது தவஞ்செய்வாரை மட்டும் குறிக்காது தவஞ்செய்வார் நிலையையும் எடுத்துக்கூறுகிறது.

இதனை அவர் நோற்பார் என்பது நோற்பாரின் நிலைமைக்கு ஆனது என்கிறார். இரண்டு சொற்களும் உயர்திணைப் பொருளாகிய மக்களைச் சுட்டுவதால் இவை பொருளாகு பெயராயின10 ~தம் என்ற சொல் தெரிந்து செயல் வகை என்னும்

அதிகாரத்தில் (குறள்.470) உயர்திணைப் பெயராக அமைந்துள்ளது. ~தம் என்பது தமது நிலைமையைக் குறித்ததனால் பொருளாகு பெயர் என்கிறார். அரசர் வினைமுற்றுதல் பொருட்டுத் தம் நிலைமையொடு பொருந்தாத உபாயங்களைச செய்வாராயின் உலகம் இகழா நிற்கும். தம் என்பது 101 ஆகுபெயர் என்கிறார் வை.மு.கோ.11 பரிமேலழகர் ~தம் மன்னர்களைக் குறிக்கிறது என்கிறார்.

கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல் - (குறள்.796) இக்குறளில் ~கிளைஞர் என்னும் பொருட்பெயர் கிளைஞரின் பண்பைச் சுட்டுவதால் இது பொருளாகுபெயர் எனலாம். அஃறிணை - பொருளாகு பெயர் அஃறிணையில் குழல், யாழ், மலை, குன்றி ஆகிய நான்கும் ஆகுபெயர்களாகக் கூறப்பட்டுளளன. குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள மழலைச்சொல் கேளாதவர். - (குறள்.66) இதன்கண் குழல், யாழ் என்னும் இரண்டு சொற்களும் அஃறிணையாகும். இவை இசைக்கருவிப் பெயர்கள் இப்பெயர்கள் இசைக் கருவிகளைக் குறிக்காமல் அவற்றிலிருந்து எழும் இனிய இசையைக் குறிக்கின்றன.

குழலினிது எனின் குழலிசை இனிது என்றும் யாழினிது எனின் யாழிசை இனிது என்றும் பொருள்கள் வெளிப்பட்டன. குழல், யாழ் என்பன அவற்றின் ஒலிகளுக்குரிய பொருளாகு பெயர். பரிமேலழகர் குழல், யாழ் என்பன ஆகுபெயர். கேட்டவர் அவற்றிசையினும் மழலைக் சொல் இனிதென்று சொல்வரென்பது குறிப்பெச்சம் என்கிறார். நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது - (குறள்.124) என்பதில் வரும் மலை என்னும் சொல் மலையைக் குறிக்காது மலையின் உயர்வைக் குறித்து வருதலின் இதுவும் பொருளாகு பெயராகும். அதாவது மலை அதன் உயர்சியைக் குறித்து வந்தது. இது போல், புறம்குனறி கண்டனைய ரேனும் அக்ங்குன்றி மூக்கிற் கரியார் உடைத்து - (குறள்.277) 102 என்னும் குறளில் வரும் ~குன்றி என்பது ஆகுபெயர். குன்றி என்னும் கொடியின் பெயர் அதன் மணியாகிய விதையைக் குறித்ததனால் பொருளாகு பெயர். இடவாகுபெயர் ~இடம் என்பது நிலம். இடத்தின் பெயர் இடத்தின் கண்ணுள்ள பொருளுக்கு ஆகிவருவது இடவாகுபெயர்.

தமிழ் இலக்கணத்தில் கண் என்னும் ஏழாம் வேற்றுமை உருபும் அதற்கு இணையாகக் கூறப்படும் உருபுகளாகிய கால், இடை, கடை, கீழ், மேல், உள், புறம் எனவரும்

உருபுகளும் இடப்பொருளை உணர்த்துவன. இவை பெயர்ச்சொல்லுடன் சேர்ந்து இடப்பொருளை உணர்த்துவதால் இடவாகுபெயர் எனப்படுகின்றன. ஏழாம் வேற்றுமை ~கண்| என்னும் உருபு இடப்பொருளில் வருமேனும் அது தம்முள் பல வகையில் பிரிந்து வருவதை இலக்கண நூல் ஆசிரியர்கள் நுண்ணிதின் உணர்ந்துள்ளனர். இடப்பொருளைச் சங்கர நமச்சிவாயர் பொருள் இடப்பெயர், இடம் குறிக்கும் இடப்பெயர், கால இடப்பெயர், சினை இடப்பெயர், குண இடப்பெயர், தொழில் இடப்பெயர் எனவரும் என்கிறார் அவர். இக்கருத்தை, மணியின் கண் ஒளி, மணியின்கண் இருந்தது ஒளி எனவும் பனையின் - கண் அன்றில், பனையின் - கண் இருந்தது அன்றில் எனவும் இரு கிழமைக்கும் பொருள் இடமாயிற்று. ஊரின்கண் இல்லம் ஊரின் கண் இருந்தது இல்லம் எனவும் ஆகாயத்தின் கண் பருந்து ஆகாயத்தின் கண் பறந்தது பருந்து எனவும் இடம் இடமாயிற்று.

நாளின் கண் நாழிகை நாளின் கண் வந்தது நாழிகை எனவும் வேனிற் கண் பாதிரி, வேனிற்கண் பூத்தது பாதிரி எனவும் காலம் இடமாயிற்று. கையின்கண் விரல் கையின் கண் இருந்தது விரல் எனவும் கையின் கண் கடகம் கையின் கண் கிடந்தது கடகம் எனவும் சினை இடமாயிற்று கறுப்பின் கண் அழகு கருப்பின் கண் இருந்தது அழகு எனவும் இளமையின்கண் செல்வம் இளமையின்கண் இருந்தது செல்வம் எனவும் குண இடமாயிற்று, ஆடற்கண் சதி ஆடற்கண் நிகழ்ந்தது சதி 103 எனவும் ஆடற்கண் பாட்டு பாடப்பட்டது பாட்டு எனவும் தொழில் இடமாயிற்று12 என்று விவரிக்கின்றார். இதனால் இடவாகுபெயரை 1.இடம் பொருளாதல் 2.இடம் இடமாதல் 3.இடம் சினையாதல் 4.இடம் பண்பாதல் என பிரிக்க இயல்கிறது. இந்த ‘இடவாகுபெயர்| திருக்குறளில் இருபத்தைந்து இடங்களில் வருகின்றது. பொருள் இடமாதல ; பொருள் ஒன்று இடமாகி அது பிறிதொன்றற்கு ஆகிவருவதனால் அது ~பொருள் இடவாகுபெயர் என அழைக்கப்படுகிறது. உலகு(குறள்.1) என்பது இடப்பொருளாகும்.

உலகம் பொருள் என்பது அறிஞர் தம் துணிபு. உலகின்கண் உள்ள உயிர்களைச் சுட்டுவது. இதனால் இஃது பொருள் இடவாகு பெயராயிற்று, உலகு என்பது இக்குறளில் பொருளாகிய இடத்தைச் சுட்டாது உலகின்கண் உள்ள உயிர்களைச் சுட்டியது. இதனால் இஃது பொருள் இடவாகுபெயர் எனப்பட்டது. கம்பராமாயணத்தில் வரும் ~உலகம்

யாவையும் தாமுளகோட்டைக்கு ஆகி வந்ததால் இது இடவாகு பொருட்பெயர் இடம்பெற்றுள்ளது. ஞாலம் என்பது உலகைக் குறிக்கும் இடப்பெயர். அருளுடைமை, கொடுங்கோன்மை, இரவு, என்னும ; அதிகாரங்களில் இச்சொல் இடம் பெற்றுள்ளது. ஞாலம் (குறள். 245, 657, 1058) என்பது இடப்பொருளைச் சுட்டும்.

இது மக்கள் என்ற பொருட் பெயர்க்காகி வந்தது. 'கா என்பது பல பொருள் ஒரு சொல். இதற்குச் சோலை, தோளில் சுமைதூக்கும் நீண்ட தடி போன்ற பொருள்களும் உண்டு. இதனைக் காத்தண்டு எனவும் கூறுவர்"19 ~கா என்பது பூம் பொழில் எனப் பொ.வே. சோமசுந்தரனார் கூறுகிறார்20 தோளில் சுமை சுமந்து செல்லும் காவுத்தடியானது அதனைக் குறிக்காமல் அதன் இருமுனைக்குரிய இடப்பகுதியைக் குறிப்பதாகத் திருக்குறளில் இடம் பெறுகிறது. ஒருதலையான் இன்னாது காமம்காப் போல இருதலை யானும் இனிது - (குறள்.1196) என்னும் இக்குறளில் ஆண் பெண்ணாகிய இருபாலரின் அன்புள்ளமும் காவின் சமமான பகுதிபோல இருத்தல் வேண்டும் எனக் குறிக்கின்றது. இடம் இடமாதல் இடம் பெயராக வரும் பெயர்ச்சொல் இடத்தைக் குறியாது பிறிதொரு பொருளுக்கு ஆகிவருவது இடவாகு இடப்பெயர். இந்தப் பெயர்கள் ஆறு குறட்பாக்களில் இடம் பெற்றுள்ளன. விண் என்ற சொல் இடப்பொருளைத் தரும். விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து உள்நின்று உடற்றும். பசி - (குறள் 13) என்னும் குறளில் விண் என்ற சொல் வானத்தைக் குறியாது வானிலிருந்து வரும் மழைக்கு ஆகிவந்துள்ளது. 'விண்ணென்னும் ஆகாயத்தின் பெயர் அங்குப் பொருந்திய மழைக்கு ஆகுபெயர்"21 என்கிறார் வை.மு.கோ. விண்| என்ற இடம் மழையாகிப் பின்னர் அம்மழை உணவிற்கு இடமாவதை இதன் மூலம் அறியமுடிகிறது. 'விண்தோய் மாமலை சிலம் பன் ஒண்டார் அகலமும் ஒண்ணுமோ பலியே"22 என்பதில் வரும். விண்| என்பது இடப்பெயராய்க் கொள்ளப்படும். மதுரைக் காஞ்சியில் விண் என்பது தேவருலகம் எனச் சுட்டடப்பட்டுள்ளது.

**தொகுப்புரை:**

இவ்வியலில் வள்ளுவர் தம். குறளில் பயன்படுத்தியுள்ள பெயர்,வினை,இடை,உரி என்னும் நான்கு வகையானச் சொற்களும் எடுத்துக் கூறப்படுகின்றன. ஆகுபெயர்கள் விளக்கம். அதுபற்றி மரபு இலக்கணங்கள் கூறும்

செய்தி, அதன் வகைகள் ஆகியன தெரிவிக்கப்பட்டுள்ளன. திருக்குறளில் இடம் பெறும் ஆகுபெயர்கள் ஒவ்வொன்றும். பொருள், இடம், காலம். சினை, குணம், தொழில்பற்றி விளக்கமாக இவ்வியலில் தரப்பட்டுள்ளது. வள்ளுவர் தம் குறளில் பயன்படுத்தியுள்ள வினைச்சொற்கள் இலக்கணம், அதன் வகைகளும், இடைச்சொல்லின் இலக்கணமும், அதன் வகைகளும் குறித்து விளக்கப்பட்டுள்ளது. உரிசசொல் மரபு இலக்கணப்படி விளக்கம் தரப்பட்டுள்ளது. ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள் பற்றிய செய்திகளும், நால்வகையான சொற்களும் அதனை வள்ளுவர் கையாண்டுள்ள திறம் குறித்து இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

**சான்றெண் விளக்கம்**


1. கார்த்திகேசு சிவதம்பி,இலக்கணமும்,சமூக உறவுகளும், பக். 21-22
2. சேனாவரையர் (உ.ஆ) தொல்.சொல்.பெயரியல். நூ.155
3. மேலது.நூ.158
4. மேலது.நூ.159
5. முனைவர்.ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கண நூல்கள். முத்துவீரியம் நூ.120
6. முனைவர்.ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கண நூல்கள். சுவாமிநாதம ; சொல்.பெயர்மரபு. நூ.39
7. சேனாவரையர் (உ.ஆ) தொல்.சொல்.வேற்றுமை மயங்கியல். நூ.114
8. தண்டபாணி தேசிகர் (உ.ஆ), நன்னூல்.சொல். பெயர்ச்சொல்.நூ.290
9. அ.தாமோதரன் (ப.ஆ) நன்னூல்.நூ.290. விளக்கம்
10. வை.மு.கோ ஆராய்ச்சிக் குறிப்புரை பக்.86
11. வை.மு.கோ ஆராய்ச்சிக் குறிப்புரை பக்.557
12. வை.மு.கோ.ஆராய்ச்சிக் குறிப்புரை, குறள்.277
13. அ.ச.ஞானசம்பந்தன ; (ப.ஆ) கம்ப. கடவுள் வாழ்த்து
14. பெ.வே.சோமசுந்தரனார்(உ.ஆ),பரிபாடல்.திருமால், மூன்றாம் பாடல் (25-26)அடிகள்
15. மேலது. பா.விளக்கம்
16. உ.வே.சாமிநாதய்யர்,புறநானூறு மூலமும் உரையும் பா.எ.364-2வது வரி

17. கு.வே.பாலசுப்ரமணியன்,நற். பா.எ.92
18. பெ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ),குறுந். பா.எ.399-1-வது வரி
19. வை.மு.கோ ஆராய்ச்சிக் குறிப்புரை, குறள்.1196.
20. பெ.வே.சோமசுந்தரனார்(உ.ஆ),பரிபாடல்.பா.எண்.10.
21. வை.மு.கோ. ஆராய்ச்சிக் குறிப்புரை - குறள்.13

**துணை நூற்பட்டியல்:**

1. திருக்குறள் மு. வரதராசனார் உரை
2. சமச்சீர் கல்வி ஒன்பதாம் வகுப்பு நூல் - தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை